**PROCEEDINGS OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED TO CONSIDER THE ISSUE OF ENVIRONMENTAL CLEARANCE BY THE STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA – TN) FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY IN AN EXTENT OF 2.99.78 HA BY M/S.S.PADMAKUMAR ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.NO.195/2B(P), 179/1A(P), 178/1 & 178/2(P) OF PERANAKAVUR VILLAGE, UTHIRAMERUR TALUK, KANCHEEPURAM DISTRICT**

**Name of the Project:** Proposed Rough Stone and Gravel Quarry by **M/s.S.Padmakumar Rough Stone and Gravel Quarry** in an extent of 2.99.78 Ha located at SF.No.195/2B(P), 179/1A(P), 178/1 & 178/2(P) of Peranakavur Village, Uthiramerur Taluk, Kancheepuram District.

**Venue:** M/s. J.S Thirumana Mandapam, Police Station Street, Salavakkam Village, Uthiramerur Taluk, Kancheepuram District – 603 107.

**Date & Time:** 29.01.2026 – 11.00 AM

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Mr. P.I. Ashik Ali, IAS | Sub Collector<br>Kancheepuram. |
| 2. | Dr. M.Dhinakaran | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 3. | Mr.V.Rangasamy | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Kancheepuram District. |
| 4 | Mr.S.Kesavan | Assistant Engineer<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 5 | Mr.V.Kathirvelan | Assistant Engineer<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 6. | Mr.S.Padmakumar | Owner of the Proposed quarry |

| | | |
|---|---|---|
| 7. | Public, NGO's and Environmentalists | 70 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Sriperumbdur welcomed the Sub Collector Kancheepuram, Government Officials, General Public and NGO's/ Environmentalists for the Public hearing and informed that the proposed Rough Stone and Gravel quarry by M/s. S.PadmaKumar, Rough Stone and Gravel Quarry, SF.No.195/2B(P), 179/1A(P), 178/1 & 178/2(P) of Peranakavur Village, Uthiramerur Taluk, Kancheepuram District in an extent of 2.99.78 Ha attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification. Furthermore, the DEE, TNPCB, Sriperumbudur has also informed the following.

The State Environment Impact Assessment Authority (SEIAA – TN) issued the Terms of Reference (ToR) with a public hearing on 25.10.2025 for preparing the Environmental Impact Assessment (EIA) report for the said activity under the Environmental Impact Assessment Notification, 2006 as amended.

The project proponent has submitted the draft EIA report to the office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur at Oragadam and requested to conduct the Public Hearing Meeting for its proposed activity. In this regard, Public Notices for this Public Hearing Meeting scheduled on 29.01.2026, were published in *Deccan Chronicle* and *Daily Thanthi Newspapers* on 25.12.2025 with the approval of the District Collector, Kancheepuram. Further, Public announcements have also been made via speakers in the surrounding villages about this Public Hearing Meeting.

The District Environmental Engineer has added that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted would be explained through a PowerPoint presentation by the EIA Consultant on behalf of the Project Proponent. Furthermore, the DEE has requested that, after the presentation, the public clearly state their name and village details and then express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public

and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN and requested the Sub Collector of Kancheepuram to preside over the meeting.

The Sub Collector of Kancheepuram has requested that the project proponent explain the proposed stone quarry project and the Environmental Impact Assessment (EIA) research that was done for the public.

Following that, on behalf of the Project Proponent, the EIA Consultant welcomed the Sub Collector, District Environmental Engineer, Government Officials, General Public and Environmentalists and then explained the Proposed stone quarry Project and EIA study conducted with help of Power Point Presentation.

After the Presentation, the Sub Collector, Kancheepuram has requested the Public to express their views / opinions either verbally or in writing by clearly stating their names and villages. Consequently, the following are the perspectives and viewpoints that the public has expressed:

1. **Mr.Pandurangan, Peranakavur Village,**

He noted that village temples are undergoing renovation funded by mineral resources and that essential infrastructure, such as roads and streetlights, has been provided. Expressing his support for the quarry, he welcomed its establishment and recommended that permission be granted following a final inspection.

2. **Mr.Jorge, Peranakavur Village,**

He stated that they were living in extreme poverty and that the quarry would provide employment opportunities to secure their livelihoods consequently, he expressed their support for its establishment of the quarry.

3. **Mr.Manokaran, Peranakavur Village,**

He stated that they have no objection to the quarry's establishment, noting that it would actually be beneficial to the community.

4. **Mr.R.Paneerselvam, Perunakavur Village,**

He stated that the quarry management had promised to resurface the village roads using CSR funds and provide welfare assistance to schools, and therefore, there is no objection to the establishment of the quarry.

5. **Mr. Sathish, Environmentalist**

He emphasized the need to create new employment opportunities and urged the government to provide housing for the homeless. He also expressed his vision for a greener and more sustainable village, calling on the quarry owner to take responsibility for planting and preserving more trees. Finally, he strongly appealed for the immediate issuance of the quarry license without further restrictions.

6. **Tmt.Papitha, Perunakavur Village,**

She stated that an existing quarry already employs 30 families and that the establishment of this new quarry would provide jobs for an additional 30 families. She welcomed the project, noting that it creates employment without discrimination for both men and women, regardless of their educational background.

7. **Mr.Ramachandran, Environmentalist**

He began by greeting the assembly and congratulating the quarry owner. He stated that industrial development is essential for the public, community life, and the government. He noted that without stone quarries, there would be no buildings, no cities, and ultimately, no modern world. Furthermore, he emphasized that local workers should be prioritized for employment and that their right to health insurance must be ensured. He also suggested that 60% of the area be planted with trees to mitigate dust and that water tanks be provided to the village through Corporate Social Responsibility (CSR) initiatives. Finally, he requested that the government grant immediate permission for the quarry.

8. **Mr.Anandan, Peranakavur Village**,

He stated that there is no objection to the quarry's establishment; however, he noted that the projected employment for 32 families is insufficient and urged for an increase in job opportunities. Additionally, he requested that measures be implemented to regulate the speed of lorries transporting stones from the site and finally he expressed his support for the establishment of the quarry.

9. **Mr.Dillibabu, Peranakavur Village,**

He stated that they have no objection to the establishment of the quarry.

10. **Mr.Ashok, Peranakavur Village,**

He stated that it was mentioned that 30 families were already working in the existing quarry, further he requested that new job opportunities be prioritized for the remaining 70 families in the village. He further stated that he was denied a job and

therefore requested that a job be given to his mother. Finally, he said that they would welcome the quarry if the aforementioned demands were fulfilled.

Then, the Sub Collector, Kancheepuram said that if any other members of the public want to express their opinions, they could come forward to register their opinion, views, and suggestion. Since, no others from the public came forward to share their views, and invited the District Environmental Engineer to summarize the meeting's proceedings.

Further, the District Environmental Engineer has summarized about the entire meeting proceedings and also informed that the said views, suggestion and responses of the public are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamil Nadu along with the written representations received from the Public.

Furthermore, the District Environmental Engineer informed that the Proceedings of the Public Hearing Meeting will be made to be displayed at the District Collectorate, Kancheepuram, Uthiramerur Taluk office, Sirumailur Village Panchayat Office, Sithalapakkam Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Comments, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –Tamil Nadu / MoEF&CC) and the applicant concerned. Finally, the Sub Collector, Kanchipuram has thanked everyone who attended the meeting on behalf of Kancheepuam District Administration.

3/2/26

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Sriperumbudur**

3.2.26

3/2/26.

**Sub Collector**
**Kancheepuram**

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Tamil & English Newspapers dated 25.12.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 4 & 70 Persons).

3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions were received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting. -31 No's

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பேரனக்காவூர் கிராமம், புல எண்கள். 195/2B(P), 179/1A(P), 178/1 & 178/2(P)ல் 2.99.78 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். S. பத்ம குமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தால் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படுவது தொடர்பாக 29.01.2026 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர்: | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பேரனக்காவூர் கிராமம், புல எண்கள். 195/2B(P), 179/1A(P), 178/1 & 178/2(P)ல் 2.99.78 ஹெக்டேர் பரப்பளவில் **தி/ள். S. பத்ம குமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி** திட்டம் நிறுவப்படுவது தொடர்பாக. |
| இடம்: | தி/ள்.J.S திருமண மண்டபம், காவல் நிலைய தெரு, சாலவாக்கம் கிராமம், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் – 603 107. |
| **நாள் மற்றும் நேரம் :** | 29/01/2026 – காலை 11.00 மணி |

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பி.ஐ.ஆசிக் அலி | சார் ஆட்சியர்,<br>காஞ்சிபுரம். |
| 2. | முனைவர்.மா.தினகரன், | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 3. | திரு.வீ.ரங்கசாமி, | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 4. | திரு.சீ.கேசவன், | உதவி பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |
| 5. | திரு.வா.கதிர்வேலன், | உதவி பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |
| 6. | திரு. S. பத்ம குமார் | உத்தேசிக்கப்பட்ட குவாரி உரிமையாளர் |

| | | |
|---|---|---|
| 7. | பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (70 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பேரனக்காவூர் கிராமம் புல எண்கள். 195/2B(P), 179/1A(P), 178/1 & 178/2(P)இல் தி/ள்.S. பத்மகுமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி 2.99.78ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பதற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 25.10.2025 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள்.S. பத்மகுமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சாலவாக்கம் கிராமம் தி/ள். J.S திருமண மண்டபத்தில் 29.01.2026 அன்று காலை 11.00

மணியளவில் நடைபெறும் என்று **"டெக்கான் கிரானிக்கல்ஸ்"** மற்றும் **"தினத்தந்தி"** ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் முறையே 25.12.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள்.S. பத்மகுமார் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விவரங்களை திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று தெரிவித்தார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள் சார் ஆட்சியர் அவர்களுகளையும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுகளையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள்

தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1.திரு.பாண்டுரங்கன், பேரனக்காவூர் கிராமம்**

இவர் கூறுகையில் கனிமவளநிதியின் மூலம் கிராமத்தில் இருக்கும் கோயில்கள் புணரமைக்கப்படுவதாகவும் மேலும் கிராமத்திற்கு அடிப்படை தேவையான சாலை வசதி, தெரு விளக்குகள் அமைத்துக்கொடுப்பட்டுள்ளதாகவும் இதனால் குவாரி அமைவதை வரவேற்பதாக கூறி இறுதியாக ஆய்வு செய்து இக்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறி குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக்கொண்டார்.

**2.திரு.ஜார்ஜ், பேரனக்காவூர் கிராமம்,**

இவர் கூறுகையில் தாங்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருப்பதாகவும் இக்குவாரியினால் வேலை வாய்ப்பு கிடைக்கப்பெறும் என்றும் இதனால் தங்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் எனக்கூறி குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக்கொண்டார்.

**3.திரு.மனோகரன், பேரனக்காவூர் கிராமம்**

இவர் கூறுகையில் இக்குவாரி அமைவதினால் தங்களுக்கு எந்தவிதி ஆட்சேபனையும் இல்லை எனவும், மேலும் குவாரி அமைவதினால் தங்களுக்கு நன்மைதான் என்றும் கூறினார்.

**4.திரு.இரா.பன்னீர்செல்வம், பேரனக்காவூர் கிராமம்**

இவர் கூறுகையில் நிதியின் மூலம் கிராம சாலைகளை சரி செய்து தருவதாகவும், பள்ளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை செய்து தருவதாகவும் குவாரி நிர்வாகத்தினர் கூறியுள்ளனர் எனவே குவாரி அமைவதினால் எந்த வித ஆட்சேபனையும் இல்லை எனக் கூறினார்.

**5.திரு. சதீஷ், NGO**

இவர் கூறுகையில் புதிய வேலை வாய்ப்பினை உருவாக்க வேண்டும் எனவும், வீடுகள் இல்லாதவர்களுக்கு அரசு வீடுகள் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும் இக்கிராமம் பசுமையுடன் நிலையாக இருக்க வேண்டும் எனவும், குவாரி உரிமையாளர் அவர்கள் அதிக மரங்களை வளர்த்து அவற்றை காப்பாற்ற வேண்டும் எனக்கூறி இறுதியாக இக்குவாரிக்கு எவ்வித தடையுமின்றி உடனடியாக உரிமம் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**6.திருமதி.பபிதா, பேரனக்காவூர் கிராமம்**

இவர் கூறுகையில் ஊரில் ஏற்கனவே ஒரு குவாரி இருப்பதாகவும், அதனால் 30 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருவதாகவும், மேலும் இக்குவாரி வரும் பட்சத்தில் மேலும் 30 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என கூறினார், மேலும் குவாரியில் படித்தோர், படிக்காதோர் என பாரபட்சமின்றி வேலை கிடைப்பதால் குவாரி அமைவதை வரவேற்பதாக கூறினார்.

**7.திரு.ராமச்சந்திரன், சுற்றுச்சூழல் ஆர்வலர்**

இவர் கூறுகையில் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு மற்றும் குவாரி உரிமையாளருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். மக்களுக்கும் பொது வாழ்க்கைக்கும் அரசிற்கும் தொழில் வளர்ச்சி தேவை உள்ளது எனவும் மேலும் கல்குவாரி இல்லாமல் கட்டடங்களே இல்லை கட்டடங்கள் இல்லை என்றால் நகரங்களே இல்லை இவை இரண்டும் இல்லாமல் உலகமே இல்லை என்று கூறினார். மேலும் இவர் கூறுகையில் குவாரியில் அடிப்படை தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் அவர்களுக்கு மருத்துவ காப்பீட்டு உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் 60% மரங்கள் வளர்க்க வேண்டும் எனவும் இதனால் குவாரியில் தூசுகள் பரவாமல் தடுக்கலாம், CSR மூலம் கிராமத்திற்கு தண்ணீர் தொட்டி அமைத்துக்கொடுக்க

வேண்டும் எனவும் இறுதியாக இக்குவாரிக்கு அரசு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

8.திரு.ஆனந்தன், பேரனக்காவூர் கிராமம்

இவர் கூறுகையில் இக்குவாரி அமைவதினால் எந்த வித ஆட்சேபனையும் இல்லை எனவும், மேலும் குவாரி அமையும் பட்சத்தில் 32 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என கூறப்படுகிறது அது போதாது வேலைவாய்ப்பை அதிகப்படுத்த வேண்டும் எனவும், குவாரியில் இருந்து சுமை ஏற்றி வரும் லாரிகளின் வேகத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்துக்கொண்டார்.

9.திரு.டில்லிபாபு, பேரனக்காவூர் கிராமம்,

இவர் கூறுகையில் இக்குவாரி அமைவதினால் தங்களுக்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை எனக் கூறினார்.

10.திரு.அசோக், பேரனக்காவூர் கிராமம்.

இவர் கூறுகையில் ஏற்கனவே உள்ள குவாரியில் 30 குடும்பங்கள் வேலை செய்வதாக கூறப்பட்டது ஆனால் ஏற்கனவே வேலை செய்வோருக்கே மீண்டும் வேலை வாய்ப்பை கொடுக்காமல் தங்கள் ஊரில் உள்ள பிற 70 குடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் தனக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டதாகவும் எனவே தனது அம்மாவிற்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இறுதியாக மேற்கூறிப்பிட்ட கோரிக்கையை நிரைவேற்றினால் இத்திட்டம் வருவதை வரவேற்பதாக கூறினார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் வேறு எவரேனும் தங்களது கருத்துக்களை தெரிவிக்க விரும்பினால் முன்வருமாறு கேட்டுக்கொண்டார். அதனை தொடர்ந்து வேறு எவரும் கருத்துக்களை கூற முன்வரைவில்லை

என்பதால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை கூட்ட நடவடிக்கை பற்றி சுருக்கமாக எடுத்துரைக்க கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை எடுத்துரைத்தார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உத்திரமேரூர் வட்டாட்சியர் அலுவலகம், பேரனக்காவூர் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், ஒரகடம் ஆகிய இடங்களில் வைக்கப்படும் எனவும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.inல் வெளியிடப்படும் எனவும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் –தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இறுதியாக சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருப்பெரும்புதூர்.

சார் ஆட்சியர்,
காஞ்சிபுரம்.

இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 25.12.2025).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (4 பக்கங்கள் 70 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்படம் அடங்கிய Pendrive- 2 No's.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 31 மனுக்கள்.